**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 08.06.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 22 (LW21)

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 08 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது நாஸ் | தொழில் | |
| கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2 to A4 ஆஜர். A1 இறப்பு)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது சென்னை பாரிஸ், பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வெங்கடேசன் எனது கணவர். வெங்கடேசனை திருமணம் செய்து கொண்ட பிறகு என்னை திவ்யா என்று கூப்பிடுவார்கள். எனக்கு உடன்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன். நானும் வெங்கடேசனும் காதல் திருமணம் செய்து கொண்டு, மதுரை, அண்ணா நகரில் செந்தில் நாதன் தெருவில் வசித்து வந்தோம். கடந்த 02.10.2012 ம் தேதி வெங்கடேசனின் பெரியம்மாவின் உடல்நிலை சரியில்லை என்று அவரை பார்ப்பதற்காக இரவு 08.00 மணிக்கு பரமக்குடிக்கு சென்றார். மறுநாள் மாலை 04.00 மணியளவில் வெங்கடேசனின் அண்ணன் செந்தில், பாஸ்கர் மற்றும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.08 16:14:18 +0530

அவரது பெற்றோர்கள் ஆகியோர் எங்களது வீட்டிற்கு வந்து வெங்கடேசன் பரமக்குடி GH–ல் சேர்க்கப்பட்டுள்ளதாக சொல்லி என்னை காரில் அழைத்து சென்றார்கள். நான் அங்கு போய் பார்த்த போது, பிணவறையில் என் கணவர் வெங்கடேசன் உடல் முழுவதும் காயங்களுடன் இறந்துகிடந்தார். இது சம்மந்தமாக பரமக்குடி நீதித்துறை நடுவர் மற்றும் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் விசாரித்த போது என் பெயர் திவ்யா என்றுதான் சொன்னேன். கையொப்பமும் திவ்யா என்றுதான் செய்துள்ளேன்.

போலிசார் விசாரிக்க அழைத்து சென்று அடித்ததால் எனது கணவர் இறந்ததாக தெரிந்து கொண்டேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வெங்கடேசன், அவர் மீதுள்ள குற்ற வழக்கின் வாய்தாவிற்கு பரமக்குடி நீதிமன்றத்திற்கு அடிக்கடி வருவார் என்றால் எனக்குத் தெரியாது. எனது கணவர் 01.10.2012 ம் தேதி மதுரையில் இருந்து கிளம்பி எந்த ஊருக்கு வந்தார் என்றால் 01.10.2012 ம் தேதி என்னுடன் இருந்தார். காந்தி ஜெயந்தியான 02.10.2012 ம் தேதி கிளம்பி பரமக்குடிக்கு சென்றார்.

என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் 03.10.2012 ம் தேதி விசாரித்த போது "திங்கட்கிழமை காலை 08.00 மணிக்கு பரமக்குடி கோர்ட்டில் பழைய வழக்கு வாய்தாவிற்கு செல்வதாக கூறி சென்றார்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. (மேற்படி வாக்குமூலத்தினை சாட்சியிடம் காண்பித்து அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளதா என்று படிக்கச்சொல்லி கேட்ட போது சாட்சி ஞாபகம் இல்லை என்று சொல்கிறார்)

மேலும் அது போன்று என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் 03.10.2012 ம் தேதி விசாரித்த போது "நேற்று மாலை 04.00 மணிக்கு எனக்கு



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.08 16:14:20 +0530

போன் செய்து, நான் சங்கு வேலையாக இருப்பதால், தான் வீட்டிற்கு வந்துவிடுவதாக கூறினார், இன்று காலை 07.00 மணியில் இருந்து போன் செய்து ரிங் போய் எடுக்கவில்லை" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என் கணவர் என்ன வகையான போன் வைத்திருந்தார் என்றால் Button Phone வைத்திருந்தார். என் கணவரின் செல்போனை, போலிசார் என்னை விசாரித்த போது காட்டினார்களா என்றால் இல்லை. என் கணவருக்கு சொந்தமாக இரு சக்கர வாகனம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த வண்டியின் எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. மதுரையில் இருந்து எனது கணவர் வெங்கடேசன் பரமக்குடிக்கு இருசக்கர வாகனத்தில் வந்தாரா என்றால் எவ்வாறு வந்தார் என்று எனக்குத் தெரியாது.

என் கணவர் இறந்த சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் Share market செய்து வந்தார். என் கணவர் என்ன படித்து இருந்தார் என்றால் 12 ம் வகுப்பு படித்திருந்தார்.

எனது முதன்மை விசாரணையில் சொன்ன, போலிசார் என்னை விசாரிக்க கூட்டிச்சென்றதாகவும், அதில் அடித்து இறந்ததாக சொன்ன விவரமானது, ஆய்வாளர் சொல்லிக்கொடுத்தன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.08 16:14:23 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .